1 2 மார் 2014

1 3 மார் 2014

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – ''ஜமாய்'' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண். 112

நாள். 12.03.2014
விஜய, மாசி, 28
திருவள்ளுவர் ஆண்டு, 2045

9326

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/2293/2014, நாள் 5.2.2014, தேர்வுக்குழு எண்.123/2013–2014.
4. அரசுக் கடித எண்.1662/சி1/2014–1, நாள் 7.2.2014.
5. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித ந.க. எண். நிதி 3/1451/2014, நாள் 18.02.2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு ''ஜமாய்'' திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் திருமதி கே.லதா, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (கிழக்கு), சென்னை–6, திரு.வே.கூழுச்சாமி, துணை செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை மற்றும் அலுவல் சாரா உறுப்பினர் திரு. ராம்ஜீ, பத்திரிகையாளர் ஆகிய மூன்று உறுப்பினர்களும் ''ஜமாய்'' என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்குக்கு தகுதியற்றது என்றும், இதர மூன்று அலுவலர் சாரா உறுப்பினர்கள் ''ஜமாய்'' என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது என்றும் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. ''ஜமாய்'' தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | கே.லதா,<br>இணை ஆணையர் (வவ)<br>சென்னை (கிழக்கு),<br>சென்னை 6. | திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், திரைப்படத்தில் ஆபாச காட்சிகள் மற்றும் வன்முறை காட்சிகள் அதிகம் இல்லை என்றாலும், திரைப்படத்தின் தலைப்பு தமிழ் |

| | | |
|---|---|---|
| . | | மொழியில் இல்லாததால் கேளிக்கை வரி விலக்கு பெறுவதற்கு இந்த திரைப்படத்திற்கு தகுதி இல்லை என்பதால், இந்த திரைப்படம் வரி விலக்கு அளிக்க தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | வே.கூ.முச்சாமி, துணைச்செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை | இப்படத்திற்கு "ஜமாய்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது தமிழ் மொழி இல்லை என்பதாலும், தமிழ் பெயர் சூட்டப்படவில்லை என்பதாலும், இப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | ராம்ஜீ | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்றாலும், திரைப்படத்தில் ஆபாசம் இல்லை என்றாலும், திரைப்படத்தில் பெரும்பாலான வசனங்கள் தமிழில் உள்ளது என்றாலும் "ஜமாய்" தமிழ் மொழி தலைப்பு அல்ல என்பதாலும், இது உருது மொழி என்பதாலும், திரைப்படத்தில் பிணத்தை போட்டு ஒப்பாரி பேச்சு ஆரோக்கியமல்ல என்பதாலும், திரைப்படத்தில் பாட்டு வரி ஆரம்பத்தில் ஆங்கில வார்த்தைகள் உள்ளது என்பதாலும் இத்திரைப்படம் நிபந்தனைக்குட்பட்டு வரி விலக்குக்கு தகுதியற்றது என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | A.L.ராகவன், பழம் பெரும் பின்னணிப் பாடகர் | இத்திரைப்படத்தின் தலைப்பு தமிழ்மொழி அல்ல என்றாலும், திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது என்பதாலும், திரைப்படத்தில் ஆபாசம் மற்றும் வன்முறை இல்லை என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | ராஜஸ்ரீ பழம்பெரும் நடிகை | திரைப்படத்தின் தலைப்பு தலைப்பு தமிழில் இல்லை என்றாலும், திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது என்பதாலும், திரைப்படத்தில் பிற மொழி கலக்கல், ஆபாசம் மற்றும் வன்முறை இல்லை என்பதாலும் இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | L.R.ஈஸ்வரி பழம் பெரும் நடிகை | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லை என்றாலும், திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது என்பதாலும், திரைப்படத்தில் ஆபாசம் மற்றும் வன்முறை ஏதுமில்லை என்பதாலும், திரைப்படத்தில் கதைக்கேற்ப பாடல் ஆங்கிலத்திலும், தமிழிலும் இருக்கிறது என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட நிலையில், ''ஜமாய்'' என்ற திரைப்படத்தின் தலைப்பானது பிறமொழிச் சொல்லாக இருப்பினும் இது தமிழில் வழக்கில் உள்ள சொல்லா என தெளிவுபடுத்துமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

5. இந்நேர்வில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் தமது 18.2.2014–ஆம் நாளிட்ட கடிதத்தில், ''ஜமாய்'' என்பது தமிழ்ச் சொல் அல்ல என்றும், உருது மொழியில் ''ஜமாய்'' என்றால் திறம்படச் செய்தல் என்று பொருளாகும் என்றும், இப்பெயர் முழுக்க முழுக்க பிறமொழிச் சொல்லே என்றும், தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்து பேசப்படுவதுபோல் இச்சொல்லும் தமிழில் கலந்து பேசப்பட்டு வருகிறது என்றும், தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு மட்டுமே கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்பெற வேண்டும் என்பது கேளிக்கை வரி விதி என்றும், எனவே விதிமுறையின்படி இப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

6. மேற்குறிப்பிட்ட சூழலில், ''ஜமாய்'' திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் திருமதி கே.லதா, இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (கிழக்கு), சென்னை–6, திரு.வே.கூ.முச்சாமி, துணை செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை மற்றும் அலுவல் சாரா உறுப்பினர் திரு. ராம்ஜீ, பத்திரிகையாளர் ஆகிய மூன்று உறுப்பினர்களும் ''ஜமாய்'' என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்குக்கு தகுதியற்றது என்றும், இதர மூன்று அலுவலர் சாரா உறுப்பினர்கள் ''ஜமாய்'' என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது என பரிந்துரை செய்துள்ள நிலையில், ''ஜமாய்'' என்ற திரைப்படத்தின் தலைப்பானது முழுக்க முழுக்க பிறமொழிச் சொல்லே என்பதால், தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையிலும், தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 21.07.2011–க்கு முரணாக உள்ளதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது அல்ல என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலாளர் /வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/3/2014
பிரிவு அலுவலர்.
12.3.14